தமிழ் மருத்துவப் பொழில்

திங்கள் வெளியீடு.

மலர் 1	செப்டம்பர், 1941	இதழ் 8

இளைப்பு நோய்

(ஆசிரியர்: மாங்காடு - வடிவேலு முதலியார்)

இஃது இப்பெயரொழிய க்ஷேடிருமல், க்ஷயம், இராஜயக்ஷ்மா, சோஷை என்னும் பெயர்களாலும் அழைக்கப்படுகிறது.

I. இளைப்பு நோய்:—உடல் பல காரணங்களால் இளைத்துக் கொண்டே வருவது என்னும் பொருளது.

II. க்ஷயம்:—இச்சொல் அக்ஷயம் என்ற சொல்லுக்கு எதிரி. அக்ஷயம் என்பது நிறைந்த க்ஷேமத்துடனிருப்பது என்று பொருள் படும். இதனை "அக்ஷய பாத்திரம்" என்னும் தொடர் மொழி யின் பொருளாலும், மணமக்களைப் பெரியோர்கள் வாழ்த்துங்கால் 'அக்ஷயமாய் இருக்கக்கடவர்' என்று வாழ்த்துவதன் பொருளாலும் அறியலாம். இதில் கூறப்படும் 'அக்ஷய பாத்திரம்' என்னும் சொல் 'வற்றாத பாத்திரம்' எனப் பட்டினத்தாரால் கையாளப்பட்டும் இருக் கிறதை நோக்கின் 'அக்ஷயம்' என்ற சொல்லுக்கு உடல்மேலேற் றிப் பொருளுரைக்குங் காலத்து உடற் கட்டுகளாகிய ஏழும் (சத்த தாதுக்களும்) யாதொரு தீங்கையும் அடைதலில்லாமல் அவ்வக் கட்டு கள் இருக்கவேண்டிய அளவில் நிறைந்திருந்து உடலை யிளைப்பிக்கா மலிருப்பது என்னும் பொருளதாகின்றது.

ஆகவே, இச் சொல்லுக்கு எதிரியான "க்ஷயம்" என்ற சொல் அவ்வேழுடற் கட்டுகளும் இருக்கவேண்டிய அளவில் நிறைந்திராமல் வற்றுவதால் உடலை வற்றச் செய்தலாகிய இளைக்கச் செய்தல் என் னும் பொருளதாகின்றது.

எனவே, உடலை இளைக்கச் செய்வது என்பது "க்ஷயம்" என்னும் சொல்லின் பொருளாம்.

சிலர் உடம்பை யிளைக்கச் செய்து கெடுத்தலோடு அதற்குக் கொடுக்கும் மருந்தையும் கெடுதியடையச் செய்வதால் 'க்ஷயம்' என்னும் பேர் பெற்ற தந்நோய் என்பர், அது பொருந்தாது. எங்ஙனமெனில்,

ஒருவற்கு யாதாமொரு நோயுண்டானல் அதை இன்னநோயென்று உணர்தற் கிடனுயிருக்கின்ற எண்வகை ஆராய்ச்சிகளாலும் பிற ஆராய்ச்சிகளாலும் உணர்தலுடன் அந்நோயின் முற்குறி, அதற்குண்டாயிருக்கும் குறிகுணங்கள் முதலியவற்றைக் கொண்டே, அதற்குப்பெயர் வைத்தல் தகுதியேயன்றி, அந்நோய்க்கு மருந்து கொடுத்துப் பார்த்துப் பெயர்வைப்பதென்பது முக்காலத்து மில்லை.

அங்ஙன மிருக்கக் கொடுக்கும் மருந்தையும் கெடுப்பதால் 'க்ஷயம்' என்று அந்நோய்க்குப் பேராயிற்று என்றப்பேர் வந்தமைக்குக் காரணங் கூறுவது,

* பக்கத்திலிருத்தலாகிய ஏது இலக்கணத்திற் குறைபாடுடைத்தாய் ஒருபுடை யொத்து ஏதுப்போலத் தோன்றுவதாகிய ஏதுப்போலியாம் (ஏதுவாபாசம்) என்றறிக.

III. கேடிருமல்—உடம்பை வளர்ப்பிக்கும் எழுடற்கட்டுகளும் கெடுதியடைந்து உடலை வற்றச்செய்து இருமலை யுண்டாக்கிக் கெடுத்தலால் இடப்பட்டபேராம்.

IV. இராஜயக்ஷ்மா:—அரசர்களுக்கு வரக்கூடிய நோய் ஆகலின் இப்பெயரிடப்பட்டதெனவும், நோய்களுக்குத் தலைமைநோயாதலால் இப்பெயரிடப்பட்டதெனவுங் கூறுவர். அவை பொருந்தா. எங்ஙனமெனில், சுரமே எல்லா நோய்களில் கலந்தும் தனித்தும் இறைவன் போலிருக்கின்றமையின் அதையும் அரசனெனக்கூறி, க்ஷயத்தையும் அரசனெனச் சொல்லி அந்த க்ஷயத்துக்குக் காரணமாய் முன்தொடர்ந்ததாகியோ க்ஷயத்துடன் பிரியாமல் (அவினுபாவமாய்) தொடர்ந்தே வரும் சுரத்தையும் அரசநோய் எனக் கூறுவதால் எனவறிக. இவ்வாறு கூறுவதும் ஏதுவாபாசத்தில் அடங்குமாறறியக்கிடக்கின்றது.

ஆகையால் அவ்வாறுய காரணங்கள் முரண்படுவதால் நாண் மீன்களுக்கு அரசனை (இராஜா) சந்திரனுக்கு வந்தநோய் போன்ற நோயாகலின் இப்பெயரிடப்பட்டதென்று பெரியோர் சொல்வர்.

சந்திரனுகிய இராஜாவுக்கு க்ஷயமுண்டென்று சொல்வது ஆகமப் பிரமாணமாய் ஐதீக மாயினமை உலகப் பிரசித்தம். எனினும்

---

* (தான் எடுத்துக்காட்டுவது ஏது லக்ஷண மில்லாதிருந்தும் ஏதுப்போற்றேன்றி ஏது வல்லாமற் போவது ஏதுவாபாச மென்றறிக.)

அது பிரத்தியட்சப் பிரமாணமேயாம். இப்பிரத்தியட்சப் பிரமாண வாதிகள் ஆங்கில வயித்தியர்களாதலால் அவ்வழியாகவே இது நிரூபிக்கப்படும். அது சந்திரன் பதினைந்து நாள் தன் ஒளி குறைவதால் அக்குறைவுக்கு 'க்ஷயம்' என்றபேர் பொதுவாயுண்மையால் அவற் கந்நோய் உள்ள தென்று கூறினரென்பது அவனைத் தேய்பிறையில் நேரே பார்க்கும் பிரத்தியட்சப் பிரமாணமாகும்.

ஆயினு மவனுக்குண்டான இளைத்தலாகிய ஒளிமழுங்கல் சில நாட்களிருந்து மீண்டும் சில நாள்கள் ஒளி நிறைவுண்டாவதால் அவ்வுவமானத்தைக் கொண்டு 'க்ஷயம்' என்னும் நோய் தீராநோய் ஆகாதெனவும் யூகிக்கற் பாலது. அவ்வாறு அது தீராநோய் ஆயின் அதற்கு மருந்துகள் சொல்லப்பட வேண்டியதில்லை. பல க்ஷயங்கள் தீர்ந்தும் இருக்கின்றன.

இதனால் 'க்ஷயம்' என்கிற சொல் தீரா நோயென்னும் பொருளைப் பயப்ப தொன்றன்று. இளைத்தல் மாத்திரம் செய்யும் ஒரு நோயெனவும், சந்திரன் சில நாள் வளர்வதுபோல உபசாரங்களாலும நிறைவு மருந்துகளாலும் பெருக்கச் செய்ய இயலு நோயெனவும் கொள்ள இடமுண்டு.

இந்நோயில் இறப்பது போல மற்ற நோய்களில் இறப்பவர்கள் இல்லாதிருப்பினும் அவ்வாறு தீராநோயெனக் கூறலாகும். மருந்து தவறும், மருத்துவத் தவறும் இந்நோய் தீராமைக்குள்ள பல காரணங்களில் சிறப்புக் காரணங்களாம்.

V. சோஷை:—உடம்பை வாட்டி இளைப்பித்தலால் இப்பேர் வழங்கலாயிற்று.

இந்நோய்க்கு எத்தனை பேரிருப்பினும் அவையனைத்தும் இளைத்தல் அல்லது இளைப்பு என்னும் ஒரு பொருளைத் தரக்கூடியனவே.

ஆகலின், அவை யனைத்தும் ஒரு பொருட் பல பெயர்ச் சொற்களா மென்றறிக.

இவ்வாறு பேர்வருவன வற்றிற் கெல்லாம் இவ்விதியே கொள்ள வேண்டும்.

ஆயினும் இதனைச் சந்திரனுன ராஜாவுக்கு வந்த நோய் போன்றதென்றதால் ஏற்பட்ட 'ராஜநோய்' என்று நிரூபித்தற்குச் சில காரணங்களுள. அவை:— ஓரரசன் அரசாட்சியில் மந்திரி முதலாயினரோடு அமர்வதுபோல இதுவும் சில நோய்களைத் துணைகொண்டு உடலாகிய ஊரில் அரசு புரிகின்றதென்றதாம் இது:

செனித்துவரு மிளைப்பு நோயரச நோயென்றெடுத்துத் தெளிவு கூறும்
தொனிக்குரையே தென்றுரைக்கில் மந்திரியே சுரமாகு மிரைப்பு நோய்
அனைத்து மதன் துணைவராங் காமாலை பெண்டிராமகலத்தாகும் [தான்
கனைத்திருக்குங் கோழையே குடியிருக்கும் புரிசையெனக்கருதினேமே

கருதரிய பாண்டுவே சொற்றனு மந்தமே காலாளாகும்
குரகதமே வாந்தியா மிரத்த பித்தமே சுதனுங் குளிரே காவல்
இருமலே புரோகிதனு மதிசாரமே சிவிகை யிரங்கல் கேள்வி
அரியணையே வாதமாம் பித்தமே தலையணையாயமர்ந்த தாமே
ஆகையாலிளைப்பு நோயரச நோயாகு மென வவனிமீதில்
ஓகையாலே யுரைத்தோம்.

வருதற்குஉரித்தான நிலையிலிருக்கும் உடலில் உண்டாம் இளைப்பு நோயை 'அரசநோ' யென்று எடுத்துத் தெளிவாகக் கூறும் தொடர் மொழிக்குப் பொருள் என்னவென்றால்

வருதற்கு உரித்தான நிலையிலிருந்த உடலில் உண்டாய் வருத்து கின்ற இளைப்பு நோயானது அரசனேய் என்று எடுத்துத் தெளிவா கக் கூறும் தொடர் மொழிக்குப் பொருளை உரைக்கின். அந்நோய்க்குச் சுரம் மந்திரியாகவும், இரைப்பு உடன் பிறந்தவராகவும், காமாலை இல் லாளாகவும், சுவாசாசயத்தில் சேர்ந்து களைப்பை யுண்டாக்கி மார்பை வலித்துப் பிடிக்குங் கோழை குடியிருக்கும் அரண்மனையாகவும், பாண்டு சேனுபதியாகவும், மந்தங் காலாட் படையாகவும், வாந்தி குதி ரையாகவும், இரத்த பித்தம் பிள்ளையாகவும், குளிர் காவலாளாகவும் (உடற்காப்பு, மெய்க்காப்பாளர், Body guards), இருமல் புரோகித னுகவும், அதிசாரம் பல்லக்காகவும், கபத்தொலி தொழிலாளிகள் சொல்வதைக் கேட்டலாகவும், வாதம் சிம்மாசனமாகவும், பித்தம் அதன்மேல் போட்டுட்காரும் தலையணையாகவும் பொருந்தியிருக் கின்றன வாகையால் இளைப்பு நோயானது அரச நோயாமென இவ் வுலகத்தில் மிகக் களிப்போடு சொன்னேம் என்பது. (தொடரும்)

ஏற்றுக்கொள்வாரா ?

(உணவு ஆராய்ச்சி)

பல தேசத்தார் பல பொருள்களை உணவாகக் கையாடுகின்றனர். ஆயினும் நம் நாடு கையாளும் அவ்வளவு பொருள்களை வேறு எந்த நாடும் கையாள்வதில்லை. இப்பொருள்களை இரசாயன முறையில் இப்பொழுது ஆராய்ச்சி செய்து, ஒவ்வொன்றிலும் எவ்வளவு வைட்ட மின்கள், (Vitamins) மா, (Carbohydrates) புரதம், கொழுப்பு, சுண்ணும்பு, அயம் முதலிய உணவு சத்துக்கள் இருக்கின்றன என்று வெளியிடப்படுகின்றது. ஒரு மனிதனுக்கு ஒரு நாளைக்கு அச்சத்து கள் எவ்வளவு தேவை யென்றும், அதற்குத் தக்கவாறு அப்பொருள் களைத் தேர்ந்து கையாளவேண்டுமென்றும் உணவு நிபுணர்கள் எழுது கின்றனர். இவர்களின் அரிய ஆராய்ச்சிகள் பாராட்டத் தக்கவையே. ஆயினும் அப்பொருள்களின் தீக்குணங்களையும், நற்குணங்களையும் ஒரு நூலிலேனும் அவர்கள் எடுத்துக் கூருதது ஒரு பெரும் குறை

யென்றே நாம் கருதுகிறோம். அது எங்ஙனமென்று கீழ்வரும் உதாரணங்களினால் அறிக:

வைட்டமின் B2 சத்தை அதிகமாகக் கொள்ளவேண்டியவர்கள் கரிவேப்பிலையைக் கொள்ளலாம். ஆனால் மலங் கட்டுப்படும்.

மா, பலா, வாழைப்பழங்களை உண்டால் மந்தம் உண்டாகும். திராக்ஷை, அத்திப்பழங்களினால் மலங் கழியும்.

வாழைப்பூ, வாழைக்கச்சல், அத்திப்பிஞ்சு இவைகளைக் கையாள மலபந்தமுண்டாகும். வீட்டுவிலக்க மானபோது உண்டால் சூதகம் சரியாக வெளிப்படாது; குறையும். அக்காலத்தில் மூங்கில் குருத்தை உண்டால் சூதகம் அதிகமாகக் காணும்.

வெப்ப குணமுள்ள மிளகாயில் வைட்டமின் C சத்து அதிகமுள்ளது. இதைக் கொஞ்சமாக உண்டபோதிலும் வயிற்றுக்கடுப்பு, சீதபேதி முதலியவைகள் உண்டாகும்.

பொருள்களிலுள்ள உணவுசத்துகளைப் பெரும்பொருட்டு, அப்பொருள்களின் ஏனைய குணங்களை யுணராது, அவைகளைக் கையாண்டால் மேற்கூறியவாறு பல குற்றங்கள் தோன்றுமல்லவா? அக்குணங்களை உணவு நூல்களில் கூறாதிருப்பது பெருங் குறையன்றோ? அக்குணங்களைக் கூறுவது மட்டும் போதுமா? போதா. தீக்குணங்களுள்ளவைகளா யிருப்பின் அவைகளை மாற்றிக் கொள்ளும் உபாயங்களையும் எடுத்துக் கூறவேண்டும். இவைகளைப் பழைய தமிழ் நூல்களில் காணலாம். அளவுகடந்த அப் பொருள்களின் குணங்களைக் கூற இங்கு இடங்கொள்ளாதாகையால், அவைகளைக் கூறாது, தீக்குணங்களைப் போக்கும் வழிகளை மட்டும் இங்குக் கூறுவோம்.

எல்லாக் கறிகளுமே யெல்லுக்காம் அல்லுக்காம்
எல்லாக் கறிகளுமெல் லார்க்குமாம்—பொல்லாக்
கறிகளுக்குச் சத்துருக லந்தமைத்து நன்றாங்
கறிகளுக்குள் வைத்தருந்துங் கால். (ப-சி.)

தீங்கை யுண்டாக்கும் (பொருள்களை) கறிகளை எதிரிடைக் குணமுள்ள கறிகளோடு கலந்து நல்ல கறிகளுடன் சேர்த்து உண்ண எல்லார்க்குமாகும்; பகல் உணவுக்கும், இராவுணவுக்கும் பொருந்தும்.

"ஒன்றிய வாதபித்த கபம் இவை யுயராவண்ணம்
நன்றுறு கறிகள்எல்லாம் நாளுமே சமைப்பர்ஆய்ந்தோர்
தின்றிடு மிளகுமஞ்சள் சீரகம் உயர்ந்தகாயம்
வென்றிகொள் சுக்கோடேலம் வெந்தயம் உள்ளிசேர்த்தே."
(ப-சி.)

நல்ல கறிகளைத் திரி தோட சமதிரவியங்களாகிய மிளகு, மஞ்சள், சீரகம், காயம், சுக்கு, ஏலம், வெந்தயம், பூண்டு இவைகளைத் தக்க

வாறு சேர்த்துச் சமைத்து அறிவுள்ளோர் உண்பார்கள். இதனல் வாதபித்த கபங்கள் குற்றமடையா. இதனைத் தற்கால ஆராய்ச்சி யாளர்கள் ஏற்றுக்கொள்வார்களாக.

கோரோசனம்

Dr. R. தியாகராஜன், L.I.M.

இப்பொருள், ரோசனம், கோமந்திரம், வச்சலமணி, ஜாதி என்னும் வேறு பெயர்களினுலும் வழங்கப்படுகின்றது. மிருகங் களின் பித்தை பொதுவாகக் குறிக்கும் பொழுது ரோசனம் என் றும், சிறப்பாகப் பசுவினதைக் குறிக்கும் பொழுது கோரோசன மென்றும் (கோ + ரோசனம் = கோரோசனம்), ஆட்டினதைக் குறிக்கும் பொழுது மைரோசன மென்றும் வழங்கப்பட்டிருத்தல் காண்க. உலகவழக்கில் உரோசனத்தை கோரோசனே என்று வழங் குதலின் ஏது என்னவென்று ஆராயப்புகின், பெரும்பாலும் பசுவின் ரோசனமே மருந்துகளில் கையாளப்படுவதினுலென்க. இவற்றைக் கீழ்க்கண்ட மேற்கோள்களினுல் தெளியலாம்.

"சத்துக்குளே நல்லு ரோசனே நிட்கந்தனே யிட்டிறுத்துவை"
(மாந்தத்தைலம்-தே-தை-சு.)

என்றும்,

"இரத்த முரோசனஞ் கோஷ்டமதுர மெருவை கழஞ்சு"
(பீநசக்கிருதம் - தே - தை - சு.)

என்றும்,

சீன நற்றிரி ரத்த முரோசனங் சிகாமைந்திரு நிட்கமொன்
றென்று"
(கண்தைலம் - தே - தை - சு.)

என்று பொதுவாகவும்,

கோடாசல மாத்திரைபுடற்குக் கோடாசல மாத்திரையாமே
கோரோசமுக் கடுபலேகோட்டமரிதாரம் பவளம்
(தே - கரிசல்.)

என்று சிறப்பாகப் பசுவின் உரோசனத்தைக் குறிப்பதும்

வடுவில் சீரக பலமை ரோசனே
கடுகு ரோகணி சிவதை மனேசிலே

(திருப்புகழ் – சித்துவகுப்பு

என்று சிறப்பாக ஆட்டின் ரோசனத்தைக் குறிப்பது மறிக. கல்லீரலினின்றும் உற்பத்தியாகிப் பித்தப்பையில் சேரும் பித்தை மூன்றிலொன்ருக, சராயத்தைக்கலந்து முறைப்படி சிறுகவைத்து பெருமாத்திரையாக உருட்டிக்கொள்ளுதல் மரபு. எருமை, மான், காட்டுக்கரடி, மயில், மீன்கள் இவைகளின் பித்தை உபயோகிப்பது முண்டு. ஆட்டின் வயிற்றில் பிறப்பதையும் பசுவின் வயிற்றில் பிறப்பதையுமே பெரும்பாலும் உபயோகிக்கின்றனர் என்பதை,

"வேதந்தனிலிரண்டாய், கூறியகோரோசனைகட்கு" (ப - சி.)

என்ற தொடரினு லறியலாம். நிற்க, இதன் சோதனையை அறிவாம். கோரோசனை விலையுயர்ந்த சரக்காகையால், செயற்கையில் செய்யப்பட்ட கோரோசனையைக் கடைகளில் விற்கின்றனர். இதைச் சோதிக்க ஓர் சிறிய ஊசியைப் பழுக்கக்காய்ச்சி, கோரோசனையில் குத்திப்பிடுங்கினுல், மஞ்சள் நிறப்புகையுடன், ஊசியின் மேலும் மஞ்சள் நிறமாய் விட்டால் நல்ல சரக்கென்றும் ஊசியின்மேல் கறுத்திருந்தால் நல்ல சரக்கன்றுஎன்றும் கண்டு கொள்ளவேண்டியது. நிற்க, இதன் உபயோகத்தை ஆராய்வோம். இது கைப்புச்சுவையையும், வெப்பவீரியத்தையும் கார்ப்பு பிரிவையுமுடையது. மற்றும் இதற்கு (1) மலமிளக்கி (2) இசிவகற்றி (3) குளிர்ச்சியுண்டாக்கி (4) பித்தசமனி (5) கோழையகற்றி ஆகிய செய்கைகள் உண்டு.

இதன் குணத்தைக் கீழ்க்கண்ட செய்யுளினுலறியலாம்:

"நீரிழிவு மேகசுர நீங்காக்கனல் வேகங்
கூறியவு ன்மாதங் குழந்தைகள் நோய்—பாரகபம்
வீறும சூரியும் போம்..........."

கனல்வேகம் - பித்தாதிக்கம். குழந்தைகள்நோய் - கிரந்தி, மாந்தம், கணம் முதலியன. மசூரி - அம்மை நோய்.

இதனைக் குழந்தைகளுக்குக் கடுகுப் பிரமாணமும் மற்றையோருக்கு இரண்டு குன்றியளவு முதல் ஐந்து குன்றியளவுவரை உபயோகிக்கலாம்.

இதனை நோய்க்குத் தக்க அனுபானத்தில் தனியாகவும், மாத்திரை, தைலம் முதலிய முறைகளாகச் செய்தும் உபயோகிக்கின்றனர். அவற்றில் சிலவற்றை ஈண்டு கூறுவாம்.

கோரோசனையை முலைப்பாலிலாவது கற்பூரவள்ளி இலைச் சாற்றிலாவது அனுபானித்து கொடுக்கச்செங்கிரந்தி தீரும். நீர்க்கோவைக்கு வெற்றிலைச் சாற்றிலே யனுபானித்துக் கொடுக்கலாம். கண் இருள் நீங்க இதனை முலைப்பாலில் இழைத்துக் கண்ணிலிட்டு வரவும். (ஏடு)

படல முதலிய கண் நோய்கள் தீரத் தேரன் தைல வருக்கச் சுருக்கத்தில் கூறப்பட்ட கண் தைலத்திலே கோரோசனையும் முக்கிய சரக்காமாறு கண்டுகொள்க.

மசூரிகை என்று கூறப்படுகின்ற அம்மை நோய்க்குக் கோரோசனையைப் பசுப்பாலில் இழைத்துக் காலை மாலை கொடுத்தல் வழக்கம். மற்றும் காலை மாத்திரம் இதைக்கொடுத்து மாலையில் தோல் சுட்ட சாம்பல் சிட்டிகையுடன் கலந்து கொடுத்தலு முண்டு. இப்படிக்கொடுத்தலினால் இந்நோயி லுண்டாம் அதிவெப்பம் தணியு மென்க.

மற்றும் கோரோசனை தொண்டை நோய்க்கும் வெப்ப நோய்க்கும் சிறந்த தென்பதையும் அதன் முறையையும் கீழ்க்காண்க:—

" கோரோசனை யொன்று லிங்க மிரண்டு
கூட்டியரைத் தாவின் வெண்ணெயிற் றின்னவே
மாறுநோய்த் தொண்டை வெப்போடு
மாறு மென்றே கும்மியடியுங்கடி"

(அ. வைத்தியக்கும்மி.)

மேற்கூறிய முறையில் சேர்க்கப்பட்ட இலிங்கத்தின் குணத்தைப் பொருட் பண்பு நூலில் கூறப்பட்ட செய்யுளினு லறியலாம்.

" பேதி சுரஞ் சந்நி பெருவிரண நீரோடுத
காத கடிகாசங் கரப்பான்புண்—ஞேத
வுரு விலிங்க சங்கதமாயூறு கட்டியும் போங்
குரு விலிங்க சங்க மதைக்கொள்."

மற்றும், பவளக்கால் மல்லிகை இலை, மிளகு, கோரோசனை இம் மூன்றையும் சரியள வெடுத்து அரைத்து மாத்திரை யாக்கி முறைச் சுரத்திற்கு மூன்று தினம் கொடுக்கத்தீரும்.

(ஆசிரியர். மா. வடிவேலு முதலியார்.)

கோரோசனை, குங்குமப்பூ, கற்பூரம், ஏலம், கிராம்பு, கோஷ்டம், சாதிக்காய், அக்கரகாரம் வகைக்கு மூன்று கழஞ்சு ($3\frac{3}{4}$ வராகனெடை) எடுத்துப்பொடித்துச் சந்தனத்தூள் குடி நீரால் நான்கு சாமமும், சண்பகப் பூக்குடிநீரால் இரண்டு சாமமும், குங்குமப் பூக் குடி நீரால் இரண்டு சாமமும் அரைத்துக் குன்றியளவு மாத்திரை செய்து உலர்த்திக்கொண்டு முலைப்பாலில் கொடுக்கச் சேத்தும நோய்கள், சன்னி, நீர்த்தோடங்கள், மயக்கம், சேத்ம சுரம் நீங்கும். இம் மாத்திரையை அண்டத் தைலத்தில் கொடுக்க வலிப்பிசிவு நீங்கும்.

குறிப்பு: அப்ரக பற்பம், ரசசெந்தூரம் முதலியவைகளை இம் மாத்திரையுடன் கூட்டிக்கொள்வது நம் நாட்டு மருத்துவர்களின்

புராதன வழக்கம். இவைகள் கொடிய சரக்காயும் இக்காலத்து சிசுக்களுக்கு ஏற்றனவல்லவாகவும் இருப்பதால் இரண்டும் நீக்கிக் கூறப்பட்டன.

மாந்தப் பிணிக்குக் கீழ்க்கண்ட செய்யுளில் கூறப்பட்ட கோரோசனை மாத்திரையைச் செய்து கொடுக்கத் தீரும்.

"சீர்சிறந்த மாசிக்காய் திப்பிலி கோரோசனமும்
கார்சிறந்த கோட்டம் கருஞ்சீரம்—பேர் சிறந்த
அக்கரா காரம் அரைத்து முலைப்பாலிலிட
இக்கணமே தீரும் இது"

சுரம் நீங்கவும் மலங்கழியவும், கோரோசனம் வராகனெடை இரண்டு, கடுக ரோகணி, நேர்வாளம் இவைகள் வகைக்கு வராகனெடை ஒன்று, இவைகளை முலைப்பால் விட்டு நான்கு சாமமரைத்துப் பயறளவு உருண்டைசெய்து நிழலிலுலர்த்தி வாத சுரத்திற்கு ஒரு மாத்திரை இஞ்சிச் சாற்றிலும், பித்த சுரத்திற்கு ஒரு மாத்திரை முலைப்பாலிலும், கப சுரத்திற்கு ஒரு மாத்திரை ஆடாதோடை, கண்டங்கத்திரி, தூதுவளை இவைகளின் இலை சரியெடை எடுத்துப் பிட்டவியல் செய்து பிழிந்த சாற்றிலும் கொடுக்கத்தீரும். இச்சா பத்தியம் வைக்கவேண்டும். இம்மாத்திரை வயிற்றைக் கழிக்குமாதலால், காலையில் மாத்திரம் உபயோகிக்க வேண்டும். மாலையில் வயிற்றைப் போக்காத கோரோசன மாத்திரையில் ஒன்று மேற்படி துணை மருந்துகளோடு சேர்த்துக் கொடுக்கலாம்.

அச்சரத்திற்குக் கீழ்க்கண்ட கோரோசனை எண்ணெயை உபயோகிக்க நல்ல பலனையளிக்கும்:—

"கருஞ்சீரகம் ரோகணி கடுக்காய் காட்டுமல்லிகைவேர் வகைக்கு
ஒரு விராகன் இண்டங்கொழுந்து ஒருபிடி உள்ளிப் பலமிரண்டு
முருவிளக்கெண்ணெய்படி அரைக்கால் முலைப்பால் வீசம்படியாக
மருந்தை யிடித்து எண்ணெயினில் மயனபதங் கோரோசனையே"

"சினையே இரண்டு விராகனெடை சேரப்பொடித் தெண்ணெய்விட்டு
தனையே வடித்துண்ணக் கேளு சதிராவயிற்று வேக்காடும்
வினையமாக வேநாக்கு வெந்து புண்ணு யிருப்பதுவும்
பனியக் காய்ச்சலுந்தீரும் பத்திய மிதற்கு நலமாமே"

நிற்க, காட்டாட்டு ரோசனையை (Goat Bezoar) ½-முதல் 1-குன்றி வீதம் பாலிலேனும் தனியாக வேனும் கொடுத்துவர, விஷங்களை முரிக்கும். தலை மூளை, இருதயம் முதலிய இராச உறுப்புகளுக்கு வலிவையும், பஞ்சேந்திரியங்களுக்கு அதிக சக்தியையும், தாது விர்த்தியையும், தேக பலத்தையும், சந்தோஷத்தையும் உண்டுபண்ணும். சிறப்பாக இருதய நோய்களைப் போக்குமென்றறிக.

தாய்களையும் குழந்தைகளையும் பேணுதல்.

VI

குழந்தைகளைப் பேணுதல்:—

இப்பொழுது குழந்தைகளாக இருப்பவர்கள்தாம், வருங்காலத்தில் பெரியோர்களாகி நாட்டைச் செழிப்புறச் செய்து நன்னிலைமையில் வைத்திருக்க வேண்டியவர்கள். ஆகையால் இவர்களை நோய் நொடியின்றிவளர்த்து, காப்பாற்றுவது முக்கியமாகும். அவர்களை வளர்த்தலின் பொறுப்பு பெரும்பாலும் தாய்களைச் சேரும். "தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்று சொல்வார்கள். இளமையில் கற்றுக் கொடுக்கும் பழக்கங்கள் தான், சாகும் மட்டும் பதிந்திருக்குமாகையால் சிறு குழந்தைப் பருவத்திலிருந்தே நல்லொழுக்கங்களில் இவர்களைப் பழக்கவேண்டும். இப்பொறுப்பிலும் சிறுபான்மை தாய்களைச் சேரும். "குழந்தைகளை வளர்த்தல்" என்பதை விரிவாகக் கூறும் பழைய தமிழ் நூல்களை இதுகாறும் நான் கண்டதில்லை. ஆயினும் பண்டைக் காலத்தில் எப்படி மாணாக்கர்கள் குருவிடம் வாய்ப்பாடங் கேட்டும் நேராகப்பார்த்தும் பொதுக் கல்வி, மருத்துவக் கல்வி இன்னும் பல கலைகளைப் பயின்றார்களோ அங்ஙனமே, பெண்களும் குழைந்தைகளை வளர்க்கும் முறைகளைத் தாய், மாமி முதலிய ஆண்டு சென்றவர்களிடமிருந்து கற்றுப் பழகி வந்தார்கள். இப்பழக்கங்களை நாம் இங்கு ஆராய்வோம்.

குழந்தையின் குளியல்:—

பிறந்த குழந்தையின் நஞ்சுக்கொடியை முறைப்படி அறுத்தவுடன் அக்குழந்தை முதல் முதல் இளம் வெந்நீரில் குளிப்பாட்டப்படுகிறது. பிறகு அறையிலிருக்கும் ஏழு நாளும் அதைக் குளிப்பாட்டுவதில்லை. அதற்குள் கொப்பூழ் உலர்ந்து விழுந்துவிடும். பிறகு அதைத் தினந்தோறும் குளிப்பாட்ட வேண்டும். ஈரத்தினால் கொப்பூழ் புண் ஆகாமலும், சீ பிடிக்காமலும் பார்த்துக் கொள்ளவேண்டும். நம் நாடு அதி வெப்பமுள்ளதாகையால் குழந்தையைத் தினம் குளிப்பாட்டுவது முக்கியமாகும். காலைக்குளியல் நன்றாயினும், மாலையில் குழந்தையைக் குளிப்பாட்டினால், பகல் வெப்பத்தினால் தோன்றிய கசிவு, அழுக்கு முதலியனயாவும் நீங்கி உடல் சுத்தப்பட்டு, அயர்வு நீங்கி ஓர்விதத் தொந்தரவுமின்றி, இன்பமாகக் குழந்தை தூங்கும். கோடைக் காலத்தில் மாலைக் குளியல் மிகவும் அவசியமாகும். இளஞ்

சூடான வெந்நீரையே உபயோகிக்க வேண்டும். இந்நீரில் மருதோன்றி வெந்தயம், முதலியவைகளை யிட்டுக் காய்சுவது நன்று என்று சில நூல்கள் கூறுகின்றன. பச்சைப்பயறுமா, சிகைக்காய் இவைகளில் ஒன்றை அரைப்பாக உபயோகிப்பது நன்று. இதை ஒழித்துச் சவுக்காரக் கட்டிகளை (Soap) கையாள்வதினுல் மினு மினுப்பான தோல் சீக்கிரத்தில் ஒளியை இழந்து விடுகிறது.

மேற்சொன்ன அரைப்புகளில் ஒன்றைக் கொண்டு மிருதுவாக உடலைத் தேய்க்க வேண்டும். கைகளைப் பிடித்து ஒரு தடவை அதன் இடுப்பு வரையிலும், ஒரு தடவை அதன் சிரசு வரையிலும் மெது வாகக் கொண்டு போக வேண்டும். இப்படியே கால்களைப் பிடித்து அதன் புட்டத்துடன் சேரும்படி மெதுவாக மடக்க வேண்டும். பிறகு நேரே நீட்ட வேண்டும். குழந்தைக்கு யாதொரு துன்பமும் வராது இவ்வியக்கங்களைச் செய்ய வேண்டும். கைக்குழந்தையாக விருக்கும் போது, பழக்கமுள்ளவர்களே அதைக் குளிப்பாட்ட வேண்டும். இன்றேல் குழந்தையின் வாய், கண், மூக்கு, காது முதலிய தொளை களில் நீர் போகவும், சுளுக்கு முதலியவை உண்டாகவும் கூடும். இரண்டு அல்லது மூன்று தினங்களுக்கு ஒரு முறை எண்ணெய் ஸ்நானஞ் செய்விக்க வேண்டும். நாபிக் கொடி யுலர்ந்த பிறகு இங் ஙனம் செய்ய வேண்டும். கருவாய்ப்பு, செவ்வாய்ப்பு முதலியன மறைந்திருந்தால் கெடுதியை யுண்டாக்கும். ஆகையால் முதல் மூன்று மாதங்களும் முட்டை வெண் கருவைத் தேய்த்துக் குளிப் பாட்டுவது நன்று. அதற்குப் பிறகு எண்ணெய் ஸ்நானம் செய்விக்க லாம் ஆண் குழந்தைகளுக்குப் பசு நெய்யையும் பெண் குழந்தை களுக்கு வாதுமை நெய்யையும் உபயோகிக்கலாம். ஆனல் இருதரத் தாருக்கும் எண்ணெய் நன்று. முதலில் முதுகுப்பட்டையில் பிடரி வரையில் கொஞ்சம் எண்ணெயைப் பூசி, இரு விரல்களால் உருவ வேண்டும். இதனுல் குழந்தைகளுக்கு உண்டாகும் 'உரம்' என்னும் படியான சுளுக்கு, தொட்டிலில் ஒரே விதமாகக் கிடப்பதாலும் முறை தவறி எடுப்பதாலும் ஏற்படும் விகற்பம், சோர்வு, ஆயாசம் முதலியன நீங்கும்.

குழந்தையைக் குளிப்பாட்டிய பிறகு சுத்தமான துவாலையால் நன்ருக ஈரமின்றித் துடைத்து விடவேண்டும். ஈரமாக இருக்கும் போது காற்றுப் பட்டால் குழந்தைக்குச் சளி, சுரம் முதலியன உண் டாகும். ஆகையால் குளிக்கும் அரையிலேயே அதைத் துடைத்து வெளியில் கொண்டுவர வேண்டும்.

சந்தாதார்கட்கு ஓர் அறிவிப்பு

அன்புடையீர்,

நாம் பொழிலைத் தொடங்கி இப்பொழுது எட்டு மாதங்களாகின்றன. இக்காலங்களில் அது செய்திருக்கும் சிறந்த பணி தாங்கள் அறிந்ததே. ஆனால் சந்தாதார்களில் பலர் தங்கள் சந்தாக்களை ஒழுங்காக அனுப்பாமலிருப்பதானது வருந்தத்தக்கது. அதனால் பணமுடை ஏற்பட்டுக் காலா காலங்களில் பொழிலை வெளிப்படுத்த முடியாமல் போகுமாதலால், சந்தாப் பாக்கியுள்ளவர் உடனே தங்கள் பணத்தை அனுப்பிவைக்க கோருகிறோம்.

தலைவர்.

ஔஷதச் சரக்குகளும் மருந்துகளும்

சிறு பிள்ளைகள் பெருக்க நெய்.

தண்ணீர் விட்டான் கிழங்குச் சாறு	படி	¼
வெள்ளாட்டுப் பால்	,,	¼
பசுப் பால்	,,	¼
தேங்காய்ப் பால்	,,	¼
பசு நெய்	,,	¼
சீனி கற்கண்டு	பலம்	5

இவைகளைக் கலந்து ஒரு பழகின மண் பாண்டத்திலூற்றி அடுப்பேற்றிச் சிறுக எரிக்கவும். சிறிது சிவந்த மெழுகு பதத்தில் வடித்துக் கொள்ளவும்.

ஆறு மாதம் முதல் ஒரு ஆண்டு வரையிலும்	1	தேக்கரண்டி
ஒரு ஆண்டு ,, மூன்று ,, ,,	2	,,
மூன்று ,, ,, ஐந்து ,, ,,	4	,,

அளவாக ஒரு நாளைக்கு இருவேளை கொடுக்கலாம்.

இங்ஙனம் நாற்பது நாள் கொடுக்கக் கணம் நீங்கும். நல்ல அழகும் களையுமுண்டாகும். இளைத்த பிள்ளைகள் பெறுகுவார்கள்.

(புலிப்பாணி 500.)

சீதபேதியின் மருத்துவம்.

சீதபேதியைக் குணப்படுத்தப் பல மருந்துகள் கையாளப்படுகின்றன. அவைகளில், சிலவற்றை எப்பொழுது, எந்தத்தருவாயில் கொடுக்க நற்பயனை யளிக்கும் என்பதைக் கூறுவோம்.

சுரமின்றி அதிக வயிற்றுக் கடுப்புடன் சிறுக சிறுக மலமும், சீதமுமாக கழியும் பேதிக்கு முதலில் சிற்றாமணக்கு நெய் ½ அவுன்ஸ் முதல் 1 அவுன்ஸ் அல்லது ஷெயில் பொரித்தெடுத்த கடுக்காய்ப் பிஞ்சு 1 வராகனெடை அல்லது மூல குடோரிநெய் ½ அவுன்ஸ் முதல் 1 அவுன்ஸ் வீதம் காலையில் கொடுக்கவும்.

வயிற்றுக் கடுப்புடன் கூடிய சீதபேதிக்கு:— இலிங்கத்துவர், அல்லது நாகபற்பத்தை இலவங்கப்பட்டை ½ வ. சாதிக்காய் ½ வ. இவைகளின் குடிநீரிலும்,

இரத்தமும் சிறிது சேர்ந்து போகுமாகில்:—ஷெ சரக்குகளுடன் செம்பருத்தியிலை ஒரு பிடி சேர்த்துக் குடிநீர்க் காய்ச்சி ஷெயே முறைப்படி கொடுக்கவும்.

சுரத்துடன் கூடிய சீதபேதிக்கு:—இலிங்கத்துவர், அல்லது நாக பற்பம், அல்லது பிரளயகாலனைத் தேனில் முறைப்படி கொடுக்கலாம்.

இரத்தங் கலந்து கழியும் (கபசம்மந்தமான) சீதபேதிக்கு:—இலிங்கத்துவர், நத்தைப்பற்பம் இவைகளைக் கலந்து நெய் ஒன்று தேன் அரை சேர்த்து முறைப்படி கொடுக்கவும்.

வாந்தியுடனே அல்லது வாந்தியின்றியோ பித்தத்தினுல் பிறந்த சீதபேதிக்கு:—

பவழ பற்பத்தைச் சுட்ட எலுமிச்சப் பழச் சாற்றில் முறைப்படி கொடுக்கவும்.

வயிறிரைந்து கழியும் (வாதத்தினுல் பிறந்த) சீதபேதிக்கு:—இலிங்கத்துவரை வெள்ளைப் பூண்டிட்டுக் காய்ச்சிய நெய்யிலாவது அல்லது தனி நெய்யிலாவது முறைப்படி கொடுக்கவும்.

குதம் வெளிப்படுமாயின்:—கோரக்கர் மாத்திரை ஒன்றைப் பருத்தியிலைச் சாற்றிலாவது, மாதளம் பிஞ்சைக் கும்பியிலிட்டு வேகவைத்துக் கல்லுரலில் இடித்துப் பிழிந்த சாற்றிலாவது கொடுக்கலாம், அல்லது வல்லாரை நெய் ஒன்று முதல் இரண்டு தேக்கரண்டி வீதம் இருவேளை கொடுக்கவும்.

குறிப்பு:—

அளவு :	இலிங்கத்துவர்	3	கிரெயின்
	நாகபற்பம்	1	,,
	பிரளயகாலன்	1	,,
	பவழபற்பம்	2	,,
	நத்தைபற்பம்	3	,,

இம் மருந்துகளை நோயாளிகளின் பல மறிந்து தினத்திற்கு இரண்டு, மூன்று, நான்கு தரம் கொடுக்கலாம்.

அதிகமுறை பேதியாயின் :—சாதிக்காய்மாத்திரை, கட்டுவாதி மாத்திரை இவைகளில் ஒன்றை மாதுளம் பிஞ்சுச் சாற்றில் இருவேளைக் கொடுக்கலாம்.

நாள்பட்ட சீதபேதியாயின் :—வெட்பாலை அல்லது நாவற் பட்டைக் குடிநீர், அல்லது வெட்பாலைமணப்பாகு முறைப்படி கொடுக்கலாம்.

அக்கினி முக சூரணம்.

சித்திரமூலம்	...	1	பலம்
சுக்கு	...	1	,,
மிளகு	...	1	,,
திப்பிலி	....	1	,,
ஓமம்	...	1	,,
சிறுதேக்கு	...	1	,,
யானைத் திப்பிலி	...	1	,,
கோஷ்டம்	...	1	,,
இந்துப்பு	...	1	,,
பெருங்காயம்	...	$\frac{1}{4}$	,,
வசம்பு	...	$\frac{1}{4}$	,,
கடுகு	...	$\frac{1}{2}$	,,

செய் முறை:—மேற்கண்ட சரக்குகளை இளவருப்பாய்ச் சூரணித்து, கூடிய அளவுக்கு சமன் சர்க்கரை கூட்டி வைத்துக் கொள்ளவும்.

உபயோக அளவு:—காலை மாலை இருவேளை வெருகடியளவு வெந்நீரில் கொள்ளவும்.

பிணி நீக்கம்:—கிராணிவகைகள், உதரவாயு, முகவாதம் முதலியன நீங்கும்.

(இரத்தினச் சுருக்கம்.)

நவலோகரஸ தாம்பிரபற்பம்

(அனுபானத்துடன்)

மேகநீர் - கிரந்தி - விஷ மேக குட்டம் - திமிர் - தடிப்பு - மதப்புகளுக்கும் உத்திரவாதமுள்ள சித்தமருந்து. எந்த மருந்திலும் தீராது கைவிட்டபின்னும் இந்த மருந்து குணப்படுத்துகிறது.

40-நாள் மருந்து ரூ. **15-4.** **V. P.** வேறு.

மதுமேகம் நீரிழிவுக்கு

உத்திரவாதமுள்ளது

மதுமேக ரஸாயனம் சுவர்ணப்ரக செந்தூரம்

40-நாளில் அரவே குணமாகிறது

40-நாள் மருந்து ரூ. 21 4 0 **V. P.** வேறு.

மிஸஸ். Dr. G. கண்ணுசாமி பிள்ளை,

ஸ்ரீ ஷண்முகானந்த பார்மசி,

திருவாரூர். (S.I.R.)

SRI RAMANA'S

SWARNA JYOTHI

EFFECTIVE REMEDY FOR TUBERCULOSIS OF ALL KINDS, ASTHMA & BRONCHITIS.

Full details about the use of Medicine, Diet, etc. will be supplied along with the Medicine.

Complete History of the patient may be furnished.

TRY ONCE AND BE SATISFIED.

15 Days Medicine Costs
Rs. 5 only.

SRI RAMANA'S PHARMACY,
Vellala Street, Vepery,
MADRAS.

ஓர் ஐயவினு?

சுத்திரச பற்பம்

ஏ. கிளாஸ் ரிஜிஸ்டர் செய்துகொண்ட சித்த வைத்தியர்களானுலும், பி. கிளாஸ் ரிஜிஸ்டர் செய்துகொண்ட சித்த வைத்தியர்களானுலும், மருத்துவந் தெரிந்தபிறரானுலும் தயவுசெய்து அடியில் வரைந்துள்ள செய்யுளுக்கு இப்பொழில் வாயிலாக உரை எழுதித் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

செய்யுள்

" செங்கலுப்பொடு சாரிபண்ணே நேர் சீனிமா வெடிகாரநீர்
செறியுமாவரிக் குமரி நீர்கள் செலுத்தியோர் சேர் சாற்றுனில்
அங்கரைப்பது மேழுநாளதில் சட்டையேழறுஞ் சுத்தியாம்
அதனை யெடுவடைய தனிலிடவகை யறையவெகு தொழிலறி[மினே
கண்ட நீரினிற் காசிடைப் பரிகடிய வீர்மோர் காசிடைக்
கலசமாக வழித்தரைத்தெடு கட்டிவில்லையைக் காயவை
அண்டவோடத னுள்ளிலிட்டெரி யரியகாரமோர் மூன்றெடு
அதனினிடையினி யமுத மதிலரை யண்டநீரி லெடுத்திடே
நூறுதானிய மதனி னிடையிடு நீருகாரமோர் மூன்றினில்
நீருமாரவி போல வேநிற மாடியோரச பற்பமாம்
வீறுமாவிநெய் தேனி னீருடல் மெல்லியார் முதத்திடு
மேனிதங்கம தாகுமேகமெலாமறுஞ் சுரவாய்வுமே" என்பது.

Dr. V. N. சாமராவ், L.I.M.

இரத்தமே உயிர்

சுவர்ண காந்தம்

காந்தமும் தங்கமும் சேர்ந்த உயர்ந்த செந்தூரம்

பாண்டு - சோகை - காமாலே - பித்த வாயு - குன்மம் - வீக்கம் - சூதக பாண்டு - மகோதரம் - கவிசை - நீராம்பல் - சூதகபந்தம் - மூலவாயு - அதிசார கிராணிக்கும் இரத்த விர்த்தி தேக பலத்துக்கும் உத்திரவாத முள்ள சித்த மருந்து.

14-நாள் மருந்து ரூ. 3 8 0 V. P. வேறு.

மிஸஸ். Dr. G. கண்ணுசாமி பிள்ளை,

ஸ்ரீ ஷண்முகானந்த பார்மசி,

திருவாரூர். (S.I.R.)

திட்டமா முகவாத மண்டைச் சூலை
　　தீர்ந்துபோம் பித்தமொடு நீல காசம்
ஓட்டுமே பீநசமும் வாயு சூலை
　　யுடம்பிலுள்ள நோயெல்லா மோடுந் தானே. (107)

ஓடுமே சிரசிலுள்ள நோய்க ளெல்லாம்
　　உத்தமனே சிகைக்காயும் பசும்பயறு மிளகு
பாடுமே பத்தியந்தான் கைப்புபுளிப் பாகா
　　பாங்கான மறுபத்திய மெல்லாங் கூட்டு
ஓடுமே ஒருதலைநோய் மண்டைச் சூலை
　　உத்தமனே நாசிபீடம் கன்ன சூலை
நாடுமோ நமன்வாத முகவாதம் சன்னி
　　நலமான பத்தியந்தான் நன்றாய்ப் பாரே. (108)

மகாமேக நெய்

பாரப்பா சர்வாங்க நோய்கட் கெல்லாம்
　　பாடுகிறேன் மகாமேக நெய்யைத் தானும்
காரப்பா பேய்த்துமட்டிவேர் பலந்தான் பத்து
　　கடுக்காய்வேர் நெல்லிவேர் தான்றி வேரும்
வேளப்பா சிற்றாமல்லி பேராமல்லி
　　வில்வவேர் வெட்டிவேர் விலாமிச் சம்வேர்
போளப்பா தூதுவளை மாதளைகாஞ் சோரி
　　பொன்முசுட்டை நன்னாரி நெய்த லெண்ணே. (109)

நெய்தலொடு செங்கழுநீர் தாமரையு மல்லி
　　நிலப்பனையும் நிலவாகை கண்டங் கத்தரி
பொய்யாது வகைக்காறு பலந்தான் போடு
　　பேய்த்துமட்டி. வேரோடு போட்டிடித்தங்
கெய்துமே பாண்டத்தி லிட்டுக் கேளாய்
　　இருதூணி சலம்விட் டெட்டொன் றாக்கி
அய்துமே கியாழமது படிதா னுன்காய்
　　அளந்துவிடு வாவினெய் படிதா னாலே. (110)

நாலோடு சாதிக்காய் கிராம்பு பத்திரி
　　நற்சீரம் ஏலமில வங்கப் பட்டை
சாலோடு மஞ்சிட்டி சாத்திர வேதி
　　சதகுப்பை வாய்விளங்கம் தாளிச பத்திரி
சேலான தேவதாரம் நல்ல சந்தனம்
　　சிறுநாகப் பூவோடு மதுரங் கோட்டம்
காலோடு மிளகுழுவை சிங்கி தேக்கு
　　கருஞ்சீரங் கத்தூரி மஞ்ச ளாமே. (111)

மஞ்சளாந் திப்பிலியுந் திப்பிலி மூலம்
மாஞ்சிலொடு கடுகுரோணி நெரிஞ்சிக் காயும்
கொஞ்சியே கொத்துமல்லி கோரைக் கிழங்கு
குரோசானி வால்மிளகு கடுக்காய் நெல்லி
மிஞ்சாதே குங்குமப்பூ மாதளையின் பிஞ்சும்
விளங்கவே வகைவகைக்கு நாற்கழஞ்சு கூட்டு
அஞ்சாதே யாவின்பால் நாலுபடி சொன்னோம்
அரைத்துமே கரைத்துமுன் னெய்யில் வாரே. (112)

வாரேநீ செவ்விளநீர் படிதா னிரண்டு
வல்லாரைச் சாறுபடி யிரண்டு வாரு
சேரேநீ பழச்சாறு படிதா னிரண்டு
சீனிசர்க் கரையதுவும் பலந்தா னாலு
காரேநீ நல்லவெல்லம் பலந்தா னாலு
கரைத்துமே அடுப்பேற்றி யெரித்துக் காய்ச்சி
வாரேநீ மெழுகுபதந் தன்னைப் பார்த்து
வடித்திடவே வடிகலசந் தன்னிற் கேளே. (113)

தன்னிலே சீரகமுங் கோரோ சனமுஞ்
சார்வாக வடித்துப்பின் சாற்றக்கேளாய்
நின்னயமாய்க் கணபதியுங் கந்தன் பூசை
நிரையாகச் செய்திடவே நெற் புடத்தில்
முன்னதாய் முப்பதுநாள் வைத்தெடுத்து
முறையோடே முக்கழஞ்சு நெய்தான் கொள்வாய்
சொன்னதொரு நாளொன்றுக் கிருநே ரங்கொள்
தொலையாத நோயெல்லாந் தொலைந்து போமே. (114)

தொலைந்தோடும் கயமீளை காச பித்தம்
சொல்லரிய தலைநடுக்கல் சொல்மா ருட்டம்
உலைந்தோடு முஷ்ணமொடு பிரமே கங்கள்
மூத்திரக் கிரிச்சியொடு கல்ல டைப்பும்
அலைந்தோடும் பெரும்பாடு பித்தச் சாய்ப்பும்
அனலோடு மேலெரிவு முஷ்ணங் காந்தி
மலைந்து போம் முசல்வலிப்பு மிரும லீளை
வாயுவொடு நீர்ச்சுருக்கு வெட்டை போமே. (115)

போமென்ற பவளபற்பம் போட்டுக் கொள்வாய்
பொல்லாத நோயெல்லாம் பொடியாய்ப் போகும்
தேமென்ற கர்ப்பத்தி லெழுந்த நோயுந்
தீர்ந்துவிடு மலடிக்கும் பிள்ளை யுண்டாம்

காமென்ற பத்தியந்தான் சாந்தமாய்க் கொள்
கைப்போடு புளிப் பிரண்டும் தள்ளிப் பாரு
காமென்ற கண்வேக மெல்லாந் தீருங்
கைகண்ட வித்தையிது கண்டுபாரே. (116)

ஏழுவகைப் பீநசத்துக்கு முடிதயிலம்

பாரப்பா ஏழுவகைப் பீனிசமும் போகப்
பாடுகிறேன் வெகுசுருக்கோர் நெய்யைக் கேளாய்
காரப்பா எண்ணெய்படி தானி ரண்டு
கரிசாலை அவிரி கஞ்சா பொன்னுங் காணி
ஊரப்பா வெற்றிலைநீர் முசுமு சுக்கை
உள்ளுலர்த்தி மூக்கிரட்டை அத்திப் பட்டை
ஆரப்பா வகைவகைக்கே ஒருபடி தான் சாறு
ஆதண்டைச் சாறுபடி யிரண்டு வாரே. (117)

வாரேநீ பழச்சாறு மாவின் பாலும்
வாருநீ படியொன்று துளசிச் சாறொன்று
காரேநீ கருஞ்சீரம் கடுகு ரோகணி
கத்தூரி மஞ்சளொடு கடுக்காய் தான்றி
கூரேநீ அதிவிடயம் அரத்தை சுக்கு
கோட்டமுடன் சதகுப்பை குரோசானி ஓமம்
சேருநீ நாகப்பூ தாளிசபத் திரியும்
திப்பிலியின் மூலமொடு சித்திர மூலம். (118)

மூலமாம் பெருங்காயம் நெல்லி முள்ளி
மிளகரணை அழிஞ்சிநொச்சி கீழ்வாய் நெல்லி
பாலமாம் வகைக்கொரு கழஞ்சு வீதம்
பழச்சாற்று லாட்டியே எண்ணெயிலே போடு
ஆலமாம் அடுப்பேற்றி யெரித்துக் காய்ச்சி
அப்பனே மெழுகுபத மறிந்து நீயும்
ஏலவே முருங்கைப்பூ வொருபிடிதான் போடா
யிதமாக வடித்திட்டுப் பூசை பண்ணே. (119)

பண்ணுவது கணேசனொடு கந்தன் பூசை
பண்ணியே நாலுநாள் வட்ட மூழ்கு
எண்ணுவது சிகைக்காயும் பசும்பயறுந் தேய்த்தே
யிளவெந்நீர் முழுகும்நாள் புளியா காது
மண்ணுவது மறுநாள்தான் கூட்டக் கொள்வாய்
மைந்தனே யிப்படிநீ முழுகும் போதே
ஒண்ணுவது சிரசிலுள்ள நோய்க ளெல்லாம்
ஓடிவிடும் ஏழுவகைப் பீநசமும் போமே. (120)

போகும்தான் தயிலங்கள் முழுகும் போது
புளியோடு புகையிலையும் பெண்ணு மாகா
ஆகுமே புளிப்போடு கைப்பு மாகா
அப்பனே மற்ருகா ளெல்லாங் கூட்டு
வேகுமே கைமுறைசெய் முறையும் பார்த்து
விதமாகச் செய்திடிலோ வியாதி தீரும்
ஆகாத வழியிடும்பு செய்வா ஞகில்
அவனுக்கோர் மருந்தொன்றும் ஆகா பாரே. (121)

ஆக்கிராணம்

பாரேநீ சிரசிலுள்ள நோய்கள் போகப்
பாடுகிறேன் ஆக்கிராணம் முப்பத்து மூன்றும்
ஆரேநீ சுண்டைவேர் சமுத்திராப் பழமும்
அரத்தை யக்ரா விடையம் ஓமம்
கூரேநீ திப்பிலியும் திப்பிலி மூலம்
குரோசானி வால்மிளகு சித்திர மூலம்
காரேநீ கருஞ்சீரங் கத்தூரி மஞ்சள்
கடுகுரோணி பெருங்காயங் கஜதிப் பிலியே. (122)

திப்பிலியுஞ் சாம்பிராணி பேர ரத்தை
திரமான அழிஞ்சில்வேர் வேப்பரிசி கடுகு
செப்பாதே யெருக்கிலைமேல் சுணையுங் கூட்டு
திரமான வகைவகைக்குக் கழஞ்சு தூக்கு
கப்பரிய தூதுவளை கண்டங் காலி
கடிதான மிளகரணை வெள்ளைச்சா ரணைவேர்
ஒப்பரிய பெருமருந்து பங்கம் பாளை
உத்தாமணியோடு கடலிராஞ்சி யென்னே. (123)

என்னவே தைவேளை குப்பை மேனி
யிவைதனிலே வகைவகைக்குக் கழஞ்செடைவேர் கூட்டு
இன்னவே அத்திப்பால் வெள்ளாட்டு நீரு
மிட்டுலர்த்தி யிடித்துத்தூள் சீலைவடி கொண்டு
என்னவே எட்டியதன் சிமிழ்தா னன்று
இல்லாவிட்டால் பேய்ச்சுரையின் குடுக்கை அடைத்துப்
பன்னவே பணவெடைத்தூள் நாசிக் கேற்றப்
பரிவான கபாலநோய் பறந்து போமே. (124)

போமென்ற பொடியதனைக் கடுதாசி தன்னில்
புகட்டியே திரியாகத் திரித்துக் கொண்டு
நாமென்ற நிம்பநெய் கொளுத்தி யாற்றி
நலமான புகைதன்னை நாசிக் கேற்ற

ஓமென்ற கபால சன்னி மண்டைக் குத்தும்
ஒருதலைநோய் நீர்ப்பாய்ச்சல் ஓடும் பித்தம்
காமென்ற கபாலத்தின் வாயுசூலை
கரப்பனொடு கண்ணோசி கன்னப் புற்றே. (125)

புற்றான ஏழுவகைப் பீநசமும் போகும்
பொல்லாத சலதோஷம் புகைநீர்ப் பாய்ச்சல்
கத்தான கபாலத்தில் விப்புருதி சூலை
காசமொடு புண்புரையும் காணு தோடும்
மற்றுமுள்ள தந்தநோய் செவிநோய் கண்ணோய்
மகத்தான சன்னிவகைத் தோடம் போகும்
சித்தான சிரசுநோய் தொண்ணூற் றாறும்
தீருமென்று பிரமமுனி செப்பினாரே. (126)

செப்பியதோர் மானிடர்க்குச் சன்னி தோடம்
சிறந்ததொரு பல்கிட்டி மூச்சடக்கமானால்
நப்பியே ஆக்கிராணம் பணவெடையே கொண்டு
நவாச்சாரம் பணவெடைதான் கல்சுண்ணங் கொஞ்சம்
நப்பியே மத்தித்து நாசிக் கேற்ற
நாடாது பல்கிட்டுஞ் சன்னி தீரும்
ஒப்பியே யின்னமொரு சேதி கேளாய்
உற்றதொரு சடத்திலே ஆறாப் புண்ணே. (127)

புண்ணென்ன மேகத்தி லடுத்த ரோகம்
புரையோடி யாறாத புண்ணுக் கெல்லாம்
அண்ணென்ன ஆக்கிராணங் கழஞ்சு கூட்டி
அரிதாரஞ் சாதிலிங்கம் ரசகர்ப்பூரங்
கண்ணென்ன கொடிக்கள்ளிப் பட்டைத் தூளுங்
கழுதைலத்தி உலர்த்தினதூள் கலந்து கூட்டு
விண்ணென்ன வகைவகைக்குக் கழஞ்சுகூட்டு
விரகோடு திருகுகள்ளிப் பால்தான் விட்டே. (128)

புண்ணுக்குப் புகை

விட்டதனை அரைத்துலர்த்தி வைத்துக் கொண்டு
விதமான புன்குபுளி தணல்கொண் டேற்றி
விட்டதின்மேல் தணலிலே பொடியைப் போட்டு
மேலேதான் கண்சிரட்டை கொண்டு மூடி
விட்டதனை வியாதியின்மேல் புகையைக் கொள்வாய்
வெடிசூலை மேகவெடி கிரந்தியரை யாப்பு
திட்டமுடன் பவுத்திரமும் அழுகண்ணி குட்டம்
தீராதகளி புண்கள் தீரு மென்னே. (129)

திருமென்ற பொடியதனை அலரிப் பாலில்
சேர்த்துநீ மத்தித்துச் சீலையிலே யூட்டி
ஆரவென்றே ஆறாத புண்மேல் போடாய்
அழுகிவிழுங் கிரந்திகுழி வாழைப் புண்ணும்
தீருமே குட்டமொடு குறைநோய்ப் புண்ணும்
தேகத்தி லெழுந்ததொரு நோய்க ளெல்லாம்
காருநீ கண்காணு தோடு மப்பா
கடிதான பத்தியந்தான் கண்டுகொள்ளே. (130)

கண்டுகொள்வாய் மூன்றுநாள் புகைதான் காட்டு
கண்டிப்பாய் ஆறுநாள் பத்தியந்தான் காரு
சென்றுதான் ஏழாநாள் தலைநீர் வாரு
சிறப்பான உப்பதனை வறுத்துக் கூட்டு
முண்டு செய்யா மறுபடியா மணக்குநெய் தேய்த்து
முழுகியபின் மற்றதெல்லா முண்டு தேர்வாய்
சென்றுவரும் புகைவேக மென்ன சொல்வேன்
தீராத நோயெல்லாந் தீரும் பாரே. (131)

விஷமுட்டித் தயிலம்.

தீரவே விஷமுட்டித் தயிலங் கேளாய்
தீராத கரப்பனொடு அழுகண்ணி சூலை
மாரவே செவ்வட்டை மரவட்டை செய்யான்
வண்டுகடி புலிச்சிலந்தி புடையான் குத்து
பேரான பில்லிவஞ் சனையேவல் சூன்யம்
பிசாசுமுதல் பூதவே தாள மோடும்
மாறாத குட்டமொடு குறைநோய் தீர
மைந்தனே தயிலமொன்று விளம்பக் கேளே. (132)

விளம்பவே எட்டிவே ரழிஞ்சில் சங்கு
வன்னிபுன்கு வண்டுகொல்லி சங்கங் குப்பி
அளம்பவே அடம்புசின்னி ஆயிலியப் பட்டை
ஆளிவேர் வெள்ளெருக்கு மருக்காரை யிண்டு
குளம்பவே சிவந்தநா யுருவி கொத்தான்
குன்றிமணி ஆவாரை கறுத்த கண்ணி
வளம்பவே சிவன்வேம்பு கழுதை முள்ளி
மருதோன்றி தாளிகருங் காவி புரசே. (133)

புரசான உள்ளுலர்த்தி கிளுவை வாகை
புலித்தொடக்கி கருஞ்சூரை கரந்தை மத்தம்
விரசான கொடிவேலி அமுக்கரா தேக்கு
விடத்தலையும் பலாசுவா மிளகருணை குமரி

அரசோடு பூவரசு மருது கொன்றை
ஆதாளி கழற்கொடி செங்கத் தாரி
சரிகுவளை பெருமருந்து காட்டுள்ளி யவிரி
சமனெடைதா னிவையெல்லாந் தறித்து லர்த்தே. (134)

உலர்த்தியே பரும்பாண்டத் திட்டு நீயும்
உத்தமனே குழிப்புடத்தில் தயிலம் வாங்கி
அலத்தியே மூஞ்சூறு அண்டங் காக்கை
அழகுண்ட கழுகாமை ஆந்தை கூகை
பலத்தியே தேவாங்கு பச்சோந்தி முசுறு
பசுந்தவளை பெருவிரியன் பச்சைப் பாம்பு
அலத்தியே பன்றிபிட்டை கழுதை லத்தி
ஆனைலத்தி பரிக்குளம்பு எருமைக் கொம்பு
முலத்தியே தலைமண்டை கழுதை மண்டை
முசல்புழுக்கை வவ்வாலோ டெலிப்புழுக்கை யென்னே. (135)

என்னவே ஒட்டைலத்தி வெள்ளாட்டுப் புழுக்கை
யிவையெல்லாஞ் சமன்கொண்டே யிடித்து லர்த்தித்
தன்னவே சீவசெந்து வகைக ளெல்லாஞ்
சமூலமு மிடித்துலர்த்தி யொக்கச் சேர்த்துப்
பன்னவே பெரும்பாண்டத் திட்டு மூடிப்
பதாரதே குழிவெட்டி அடிக்கலசம் வைத்துத்
தன்னவே குழிப்புடத்தில் தயிலம் வாங்கிச்
சமனாக முன்தயிலத் தொக்கச் சேரே. (136)

சேருமே யிரண்டுவகைத் தயில மொன்றாய்ச்
செங்கொட்டைத் தயிலமரைப் படியே வாரு
காருமே கருங்குங்குலியங் கழஞ்சு மெட்டு
காணாத திகைப்பூடு கழஞ்சு மெட்டு
ஆருநீ கரியசீ ரகந்தா னெட்டும்
அழகான தேவதாரங் கத்தூரி மஞ்சள்
சேருநீரசகர்ப்பூரங் கழஞ்சதெட்டு
சென்னகரைப் பட்டையது பலந்தானென்றே. (137)

பலமான பறங்கிப்பட்டை பலந்தானிரண்டு
பாங்கான கத்தூரிப் பட்டைபல மிரண்டு
பலமான பிரம்பதன் கிழங்குபல மிரண்டு
பேரான வலம்புரிக்காய் வாலுழுவை கடுக்காய்
அலையாதே வகைவகைக்குப் பலந்தானென்றும்
ஆட்டுவாய் கொடிக்கள்ளிச் சாறுதியம் பட்டை
மலையாதே விட்டரைத்துத் தயிலத்தில் வாரு
மகத்தான நோயெல்லாம் மாண்டு போமே. (138)

மாண்டுபோம் பூதபி சாசுவே தாளம்
மருண்டோடுஞ் வஞ்சனையும் பில்லி சூன்யம்
மாண்டுபோஞ் சொரிநோவு சிரங்கு குட்டம்
மாருத அழுகண்ணி வாதஞ் சன்னி
மாண்டுபோம் இவையெல்லாந் தயிலம்பூச
மயில்நெய் வேம்புநெய் சேர்த்துக்கொள்ளு
மாண்டுபோஞ் சர்வாங்கம் துவாலை போடு
மற்றுநாள் வேதுவிட்டுக் குளித்துப் போடே. (139)

குளிக்கவே தழுதாழை கரந்தை நொச்சி
குன்றிமணி சங்கங்குப்பி வாத மடக்கி
களிக்கவே நோயறிந்து வேது கூட்டு
கைப்போடு புளிபுகையுந் தள்ளிப் பாரு
விழிக்கவே உப்பதனை வறுத்துக் கூட்டு
வெள்ளாடு முயலுடும்பு அயிரை விரால்
அழிக்கவே வழுதலங்காய் முருங்கைப் பிஞ்சும்
அரைக்கீரை பசும்பயறு மறிந்து கூறே. (140)

கொமட்டிக்காய்ப் பதங்கம்.

கூறவே கொமட்டிக்காய்ப் பதங்கஞ் சொல்வேன்
கூறியதோர் வாதமெண் பதுந்தான் போகக்
கூறவே தழுதாழை ஆயிலியப் பட்டை
கொடிவேலி பாவட்டை அமுக்க ராவேர்
மூறிடவே வெண்சாரணை சத்திச் சாரணை
முடக்கொத்தான் பெருவாகை தூதுவளை சடைச்சி
தேறியே தைவேளை குப்பை மேனி
சிவன்வேம்பு பிரம்பினிட கிழங்கொன் றுமே. (141)

ஒன்றான விவையெல்லாஞ் சூரணமே செய்தங்
குத்தமனே கண்டதிப்பிலி கிராம்பு மோமம்
தின்றான வால்மிளகு தாளிசபத் திரியும்
திப்பிலியும் வாலுழுவை திப்பிலி யின்மூலம்
சென்றான அக்கிராகாரம் வாலுழுவை கஞ்சா
திரமான லவங்கப்பூ சாதிக் காயும்
அன்றான சதகுப்பை பறங்கிப் பட்டை
அரத்தைசுக்கதிமதுரம் சிறுநாகப் பூவே. (142)

பூவான கருஞ்சீரகம் வகைக்குநாற் கழஞ்சு
பொடித்துநீ முன்மருந்தோ டொக்கச் சேரு
தேவோடு கல்வத்திலிட்டுக் கேளாய்
திருகு கள்ளிப் பாலோடு முத்தாமணிச் சாறும்

பாவோடு வார்த்ததனை அரைத்து லர்த்திப்
பக்குவமாய்ப் பேய்க்கொமட்டிக் காய்தான் கேளாய்
கோவோடு வேண்டியது கொண்டு வந்து
குடைந்துள்ளே சதையோடு விரையும் போக்கே. (143)

போக்கியே மருந்தெல்லாங் காயி னுள்ளே
புகட்டியந்த வோட்டாலே மேலே மூடி
மேக்கியே பாண்டத்தி லிட்டு நீயும்
மேல்மூடிச் சீலைசெய்து குழிதான் வெட்டிக்
கேட்கவே வெள்ளாட்டுப் புழுக்கை மைந்தா
கீழ்மேலும் நடுப்பாண்டம் வைத்து நன்றாய்ப்
பாக்கியே புடம்போட் டாறவிட்டுப் பாராய்
பருவமாங் காயெல்லாஞ் சிவந்து காணும். (144)

காணுவது கருகாம லிப்பால் வாங்கிக்
காயெல்லா மாறவிட்டு மருந்தைக் கொட்டிப்
பேணியே குங்குமப்பூ சாதிக் காயும்
போட்டுநீ பொடிசெய்து வைத்துக் கொண்டங்
காணுவது வெருகடித் தூளந்தி சந்தி
அப்பனே மூன்றுநாள் ஆறு நாட்கொள்
காணுவது வயிறுளைந்தால் நிறுத்திப் போடு
கலங்காதே எருமைமோர் சோறு முண்ணே. (145)

உண்ணவே வாதமெல்லா மோடிப் போகும்
உத்தமனே கைப்போடு புளிபுகையுந் தள்ளு
தண்ணியே பத்தியத்துக் காகா தெல்லாந்
தள்ளிவிடு மற்ற தெல்லா மிச்சாப் பத்தியங்
கண்ணவே உப்பதனை வறுத்துக் கூட்டு
கண்காணு தோடுமடா வாதமொடு சூலை
ஒண்ணுவது காலுகை முடக்கிழுப்பு வாதம்
உத்தமனே பட்சவாதம் ஓடும்பாரே. (146)

ஆடாதோடை லேகியம்

பாரேநீ க்ஷயந்தீர ஆடா தோடை
பாடுகிறேன் தூதுவளை சிறுகாஞ் சோரி
காரேநீ முசுமுசுக்கை கண்டங் காலி
கரிசாலை முள்ளங்கி மணத்தக் காளி
சேரேநீ சிறுமுருங்கை வழுதலையும் சங்கு
சேர்ந்தநில வாவாரை சூரணமே செய்து
காரேநீ கடுக்காயுங் கோட்டங் திப்பிலி
கடுஞ்சீர கம்மிளகு வசம்பிந் துப்பே. (147)

உப்பான சிற்றரத்தை பேரரத்தை
உத்தமனே வாலுழுவை கூகை நீறு
செப்பாத சீரகமுங் கர்க்கடக சிங்கி
சிறுநாகப் பூவோடு நெல்லி முள்ளி
உப்பாக வகைவகைக்குக் கால்பலமே தூக்கி
உத்தமனே யிடித்துநன்றாய் முன்மருந்திற் சேரு
செப்பாக ஆவின்நெய் படிதான் வாரு
சிறப்பான வெள்ளாட்டின் பால்படிதான் வாரே. (148)

வார்த்துமே அரக்காம்பல் சாறுபடி வாரு
வளமாக வடுப்பேற்றிக் கொதிவரும் போது
பார்த்துமே பனங்கண்டு பலந்தா னொன்கு
பனைவெல்லம் பலம்நாலு போட்டுக் காய்ச்சு
கோர்த்துமே பாகுவரில் சூரணத்தைக் கொட்டிக்
கொம்புத்தே னொருசேரைக் கூட வாரு
ஆர்த்துமே லேகியமாய்ப் பண்ணிக் கொண்டங்
கந்திசந்தி நாளொன்றுக் கிருநேரங் கொள்ளே. (149)

கொள்ளுவது பவளபற்பம் அரிதார பற்பம்
கூட்டியே நேரமொரு பாக்களவு கொள்வாய்
தள்ளாதே மண்டலமே கொள்ளும் போது
க்ஷயமிளை க்ஷயமிருமல் மந்தார காசம்
விள்ளாதே ஓடிவிடும் க்ஷயரோக மேழும்
மேகவகை கிரந்திகுட்டம் உஷ்ண வாயு
கள்ளமாம் நோய்களெல்லாங் காணு தோடுங்
கைகண்ட வித்தையிது கண்டு பாரே. (150)

பாரேநீ கைப்போடு புளிப்புந் தள்ளு
பசுவின்நெய் வெள்ளாட்டு மாமிசமுங் கூட்டு
சேரேநீ ஆவின்பால் வெள்ளாட் டுப்பால்
தினந்தோறுஞ் சீனியிட்டுக் காய்ச்சிக் கொள்வாய்
சேரேநீ பத்தியந்தான் முறையே செய்து
சேர்ந்துபார் சண்டாள நோய்கள் போகும்
ஏரேநீ தலைமூழ்க ஆவின் நெய்யாம்
இல்லாவிட்டால் முக்கூட்டு நெய்யில் மூழ்கே. (151)

அரிதார பற்பம்

மூழ்கவே அரிதார பற்பஞ் சொல்வேன்
முனையான அரிதாரம் பலந்தா னொன்று
தேழ்வான கற்சுண்ணம் படிதா னொன்று
தேசிநீர் படியிரண்டு செப்பக் கேளாய்

வாழ்கவே புதுச்சட்டி தன்னி லேதான்
வளமான கற்சுண்ணங் கீழ்மேலிட்டு
நாழ்கவே அரிதாரங் கிழிபோல் கட்டி
நடுவேநீ கிழிவைத்துத் தேசிநீர் வாரே. (152)

தேசிநீர் தன்னிலே உவர்ப்பூ விட்டுத்
தெளியவைத்துத் தெளிவிறுத்து வார்த்து நீற்று
ஆசியே யிப்படிநீ யேழுதரஞ் செய்தால்
அரிதார மஞ்சள்கக்கி வெள்ளை யாகும்
மாசியே அதையெடுத்து மறுசட்டி யிட்டு
மைந்தனே அடுப்பேற்றி யீருள்ளிச் சாறு
காசியே படியொன்று கரந்தைச்சா றொன்று
கலந்துமே சுருக்கிட்டுக் கருதிக் கேளே. (153)

கருதுபுர சம்பட்டை புளியம் புறணி
கனமான நாயுருவி சுட்ட சாம்பல்
கருதுவேன் வகைவகைக் கிரண்டுபடி சாம்பல்
கலந்துமே சட்டியிலே கீழ்மே விட்டு
அருதியே தாளகத்தின் கவசங் கேளாய்
அண்டோடும் உவர்ப்பூவுந் தலைமண்டை யோடும்
வெருவியே சுண்ணநீ ராவின் பாலும்
விட்டரைத்து மேல்கவசங் கட்டிப் போடே. (154)

கட்டியே ரவியிலிட்டு உலர்ந்த பின்பு
கனமான சாம்பலிலே நடுவே யிட்டுச்
சட்டியே மேல்சட்டி கொண்டு மூடிச்
சந்துவாய்ச் சீலைசெய் தடுப்பி லேற்றிக்
கட்டியே தென்னைமட்டை தென்னம் வேரால்
கமலம்போல் எரித்திடுவாய் நான்குசாமம்
அட்டியில்லா தாறவிட் டெடுத்துப் பாராய்
அரிதாரம் நீறுமப்பா ஆர்சொல் வாரே. (155,

சொல்லாத பற்பமொரு பணவெடைதான் மைந்தா
சுகமான நெய்தேனில் கூட்டிக் கொள்ளக்
கொல்லாத க்ஷயமீளை மந்தார காசங்
குலைந்தோடுங் கிரந்தியரை யாப்புகுட்டம்
சொல்லாதே வேதையிட்டால் ஏழுமாற்று
சுருக்காகும் ரசபற்பஞ் சேர்த்துக் கொண்டால்
கல்லான நோயெல்லாந் தீரு மிப்பார்
கைமுறையாய்ச் சொல்லிவிட்டேன் காணலாமே. (156)

பவள பற்பம்

பாரேநீ பவளபற்பஞ் சொல்லக் கேளாய்
பாங்கான நற்பவளம் பலந்தான் தூக்கி
ஏரேநீ யிலந்தையிலே அரைத்து நன்றாய்
இரட்டையாய்ப் பிடித்ததன்மேல் பவளம் வைத்துப்
போரேநீ மேலுமந்த அடையால் மூடிப்
பொருந்தவே சீலைசெய்து முழப்புடத்தில் போட
ஆரேநீ ஆறவிட் டெடுத்துப் பாராய்
அப்பனே பவளமெல்லாம் பீங்கானி விட்டே. (157)

இட்டுமே வாவின்பால் நிறையாய் வார்த்தே
என்மகனே ரவியில்வைக்க நீறும் பாராய்
திட்டமாம் பவளபற்பம் யாருஞ் சொல்லார்
செப்பாதே வெகுசுருக்குத் தீரும் பாரு
கொட்டாதே பற்பமொரு பணவெடையே தூக்கு
கொம்புத்தேன் ஆவின்நெய் கூட்டிக் கொள்வாய்
தட்டாதே மேகமாங் கிரந்தி சூலை
க்ஷயமீளை யிரைப்பிருமல் நீர்ச்சிறுப்பும் போமே. (158)

சிங்கி பற்பம்

போமென்ற சிங்கிபற்பம் சொல்லக் கேளாய்
புகழான கலைக்கொம்பு பிளந்து நாலாய்
ஆமென்ற மேனியிலே அரைத்தங் கப்பி
அப்பனே முழப்புடத்தி விட்டு வாங்கித்
தேமென்று நீறுமது தீர்க்க மாகத்
திரமான ஆவின்பால் விட்டரைத்துத்
தாமென்ற முழப்புடத்தில் போட்டா யானல்
சங்குபோல் நீறியது தவளமாமே. (159)

தவளமாம் பற்பமிரு பணவெடையே தூக்கு
சார்வான ஆவெண்ணெய் தன்னிற் கொள்வாய்
துவளமா மேகமுடன் உஷ்ண காந்தி
தொலையாத சூடெரிவு நீர டைப்பு
கவளமாம் பவளபற்பம் சேர்த்துக் கொள்வாய்
கல்லடைப்பு நீரடைப்பு க்ஷயரோகங்கள்
துவளமாம் க்ஷயமீளை தூர்மாங் கிசங்கள்
தொலையாத நோயெல்லாந் தொலைந்து போமே. (160)

பல் பொடி

போமென்ற தந்தநோய் முப்பத் திரண்டும்
போகவே உப்புமொரு பலந்தான் வாங்கி
வேகவே யர்க்கம்பால் மேனிச் சாறும்
விட்டரைத்து வில்லைதட்டிக் காயவைத்தே
யாமென்ற ஓட்டிலிட்டு மேலோடு மூடி
ஆறினபின் முழப்புடத்தி லிட்டு வாங்கி
ஆமென்றே பொடிசெய்து வேறே வைத்தங்
கயப்பொடியுங் துருசுதுத்தங் காய்ச்சுக் கட்டியே. (161)

கட்டியே கருஞ்சீரங் கண்டங் கத்தரி
விரையோடு களிப்பாக்கு வகையொன் றுக்கே
ஒட்டியே கழஞ்செடைதான் சமனுய்ச் சேர்த்தங்
குத்தமனே அயக்கரண்டி தன்னி லிட்டே
அட்டியே வறுத்துநன்ருய்க் கல்வத்திட்டே
அதினேடு கொட்டாங்கச்சிக் கரியுங் கூட்டி
இட்டுமே பொடிசெய்து முன்பொடியோ டொக்க
எடைபாகங் குறையாமல் சமனுய்ச் சேரே. (162)

கொப்புளிக்கக் குடிநீர்

சேரேநீ கொப்புளிக்கக் குடிநீர் கேளாய்
திரமான கடுக்காயுஞ் சுக்கான் கல்லும்
ஏரேநீ முடக்கொத்தான் கருவேலம் பட்டை
யெரிகாலன் நீர்ப்பூலா விவைதா னுறும்
பாரேநீ யிடித்திடொரு பாண்டத்திட்டுப்
பதக்குநீர் விட்டெரித்துக் குடிநீர் காய்ச்சிக்
கூரேநீ பொடியெடுத்துத் தந்தசுத்தி செய்து
குடிநீரை வார்த்துக்கொப் புளித்துப் போடே. (163)

போடவே பல்லசைவு தந்தவாயு
பொல்லாத பல்குத்துப் பல்லினரணை
மூடவே பல்புழுவு பல்லுக் கூச்சம்
முகவாதஞ் சன்னியொடு தந்த சன்னி
நீடியதோர் பல்வாதம் பல்லு ளைச்சல்
நேத்திரநோய் வேர்வெட்டு சொத்தைப் பல்லு
பாடியதோர் தந்தநோய் முப்பத்திரண்டும்
பறந்துபோம் பொடியினது வேகந் தானே. (164)

கர்ப்பநோய்க்கு நெய்

பறந்துபோங் கர்ப்பநோய் தீர வேண்டில்
பாடுகிறேன் விளக்குநெய் படிதா னிரண்டு
விரைந்திடவே பேய்க்கொமட்டிச் சாறுபடி யிரண்டு
வேப்பம்பட் டைச்சாறு கழற்கொடியின் சாறு
முறைந்திட்ட ஐவேலி பிரமிச்சாறும்
முடக்கொத்தா னுள்ளுலர்த்தி காட்டுள்ளிச் சாறும்
இருந்திட்ட வகைவகைக் கிரண்டுபடி சாறு
நெய்யிலே வார்த்திடுநீ இன்னங் கேளே (165)

கேளேநீ கொடிவேலி பங்கம் பாளை
கிளுவைநில வாவாரை குருந்து சங்குவா
வேளேநீ மூங்கிலிலை கத்தூரிப் பட்டை
வெள்ளறுகு தலைச்சுருளி காக்கட்டான் குமரி
வாளேநீ வெள்ளைச்சா ரணையி னோடு
வகைவகைக் கொருபலந்தான் வரிசை யாகக்
கோளேநீ கொடிக்கள்ளிச் சாற்று லாட்டிக்
குழைப்பியே நெய்யிலே கரைத்து வாரே. (166)

வாரேநீ கடுகோடு திப்பிலியுங் கடுக்காய்
வால்மிளகு குரோசானி கடகரோ கணியும்
ஆரேநீ கருஞ்சீரங் கத்தூரி மஞ்சள்
அரத்தைசுக்கு வால்மிளகு சிறுநா கப்பூ
பேரேநீ இந்துப்புமானைத் திப்பிலி
பெருங்காயஞ் சாதிக்காய் தாளிசபத் திரியும்
ஏரேநீ செங்கொட்டை ரசகர்ப் பூரம்
இஞ்சியொடு நவாச்சார மியம்பக் கேளே. (167)

இயம்புகிறேன் வகைவகைக்கு நாற்கழஞ்சு வீதம்
எரிகாலன் சாறோடு வெள்ளாட்டு நீரும்
அயம்புகிறேன் விட்டரைத்து நெய்யிலே வாராய்
அடுப்பேற்றி யெரித்துநீ மெழுகுபதம் பாராய்
அயம்பாத வடிகலசந் தன்னிற் கேளாய்
ஆகாசத் தூளோடு வெங்கார மிரண்டும்
வயமாக வகைவகைக் கிருகழஞ்சு போடு
வடித்தெடுத்து நெயயைநீ வைத்துக் கொண்டெண்ணே. (168)

எண்ணெயே மூன்றுநாள் கொள்ளும் போதே
என்னசொல்வேன் கர்ப்பநோ யேழுமங்கே
தண்ணவே சூதகவாயு திரட்சி குன்மம்
தொலைந்தோடுங் கர்ப்பகிராணி வாயு சூலை

விண்ணவே பத்தியந்தான் மூன்று நாளும்
வெள்ளாட்டுப் பாலொழிய வேமூன்று மாகா
அண்ணவே பாலில்லா வெந்நீ ராகும்
அப்பனே நாலாநாள் தலைநீர் வாரே. (169)

வார்த்தநாள் முதல்மற்ற மூன்று நாளும்
மைந்தனே ஆரையிலை கிளுவை யிரண்டும்
ஆத்துமே ஐவிரலி யிலையுங் கூட்டி
அரைத்தாவின் பால்வெண்ணெய் தன்னிற் கொள்வாய்
ஏத்துமே ஆறுநா ளெண்ணெய் மூழ்கி
யேழாநாள் நாயகனோ டிணங்கச் சொல்வாய்
போற்றரிய மலடியுமே பெறுவாள் பிள்ளை
பெண்மலடோ உலகத்தி லில்லை காணே. (170)

இல்லையப்பா கைகண்ட வித்தை பாராய்
இரிசிருப தானாலும் பிள்ளை யுண்டு
தொல்லையே பசாசுபிணி கிரக தோஷம்
சுருக்கமாய்ச் சாந்திசெய்து தகடு செய்தே
அல்லதுவே நோயோடு பேயுங் கூடில்
அவிழ்தந்தா னேதுசெய்யு மப்பா கேளாய்
மல்லவே மணிமந்திர முன்னே செய்து
மறுபடியு மருந்துசெய்யப் பலிக்கும் பாரே. (171)

குளிசம்

பலித்திடவே அயத்தகடு சதுர மாகப்
பண்ணியதி லிருபத்தஞ் சரைதான் கீறிப்
பலிக்கவே அறைதோறுஞ் சிவயநம வென்றும்
மநயவசி யென்றதனை மாறிப் போடு
சுழிக்கவே சுற்றெல்லாஞ் சூலம் போடு
சூலத்தி னுனிதோறும் மகாரம் போடாய்
அலிக்கவே அறைதோறும் ஓங்காரம் போடாய்
ஐம்பத்தோர் லக்கமதி லடைத்தி டாயே. (172)

அடைத்திடவே நோயாளி பேரு மிட்டே
ஐங்காயந் தேசியதன் கருவும் பூசு
தடுத்திட்டு லட்சமுரு வேறச் செய்து
சாந்தியுட னோமஞ்செய்து சாபம் நீக்கி
நொடித்திட்டுக் கும்பத்தில் சலத்தை வாங்கி
நோயாளி சிரசிலே புரோக்ஷித்து நீயும்
வடித்திட்டிங் கிப்படியே தகடு செய்து
வைத்தியனே பின்னவர்க்கு மருந்து செய்யே. (173)

செய்திடவே தீராத நோயு முண்டோ
தேசத்தி லுனைப்போன்ற வைத்திய னுண்டோ
நொய்யாதே நோயாளி சொல்லக் கேளாய்
நோய்தீர வைத்தியனை உபசாரம் பண்ணி
மெய்யனே யென்றுகுரு பாதம் போற்றி
மேதினியில் தானதர்மஞ் செய்து வாநீ
அய்யனே வினையெல்லா மகன்று போகும்
ஆதவன்போல் நீடூழி வாழ்வாய் தானே. (174)

நவாச்சார எண்ணெய்

வாழ்கவே எண்ணெயிலே நவாச்சாரம் போட்டு
மைந்தனே நீர்முள்ளிச் சாறுங் கூட்டி
வாழ்கவே உள்ளுக்குக் கொள்ளச் சொல்வாய்
மகோதரம் நீராம்பல் பெருவயிறு தானும்
போகுமே பொல்லாத குன்ம மெட்டும்
பித்தமுட னுளைமாந்தை பாண்டு சோகை
யேகுமே கரப்பனொடு வாத குன்மம்
இந்திரகண்டி மலக்கசடு மிரைச்சல் வாயுவே. (175)

வாயுவொடு புழுக்கிருமி யெல்லாம் போகும்
வாகுபெறச் சொல்லி விட்டேன் எண்ணெய் தன்னை
வாயுவொடு வியாதிகட்டும் மலடி கட்கும்
வைத்தியத்தில் தீராவிட்டா லென்ன சொல்வேன்
நோயேது அவரவர்கள் செய்த கர்மம்
நோய்போலே அவரவரைத் தொடர்ந்த தப்பா
நாய்போலே அலையாதே சொல்லக் கேளாய்
நலமான கருமத்தைத் தீரச் செய்யே. (176)

தீரவே தானதர்மஞ் செய்ய வேணும்
சிவபூசை குருபூசை செய்யவேணும்
தீரவே கோவில்குளம் கட்ட வேணும்
சிவாலயங்கள் திருவிளக்கு வைக்கவேணுங்
தீரவே அன்னதானங் கன்னிகாதானங்
திருவருச் சனங்பவனஞ் செய்ய வேணும்
தீரவே தர்மத்தை விரும்ப வேணுங்
தீராத தீவினைதான் தீர வென்றே. (177)

தீரவென்றால் வயித்தியனை உபசாரம் பண்ணு
திரமான வாதிமகன் வயித்தியனே யாகில்
தீரவென்று சாஸ்திரத்தை ஆய்ந்து பார்த்துச்
செய்முறையுங் கைமுறையுந் திரமாய்ச் செய்வான்